இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நான் பேச்சுவார்த்தைக்கு அழைத்து என்ன பலன் ஏற்படப்போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு ஆலோசனை சொன்னவர்கள் நான் அலட்சியப்படுத்தி விட்டதாகத் தயவு செய்து கருதாமல் நிலைமையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

40 அல்லது 50 வண்டிகள், பேருந்துகளும், தனியாருடைய கார்களும் தடுத்து நிறுத்தப்பட்டு வழியெல்லாம் கற்களும், மரங்களும் வெட்டிப்போடப்பட்டபோது அதை அகற்றுகின்ற முயற்சியிலே போலீசார் ஈடுபட்டபோது அவர்களைப் பயங்கர ஆயுதங்களால் தாக்கியும், கல்லால் அடித்தும், பல போலீஸ்காரர்கள் அடிபட்டு விழுந்தபிறகுதான் வேறு வழியில்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலே இறந்துவிட்ட இளைஞனுக்காக நான் கண்ணீர் விடுகிறேன், அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பாற்றுகின்ற அந்த முயற்சியிலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு துளியும் பின்வாங்காது என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, சட்டம், ஒழுங்கு, அமைதியைப் பாதுகாக்கின்ற அந்த முயற்சிக்கு, இங்கேயுள்ள அனைத்து கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன்.

2. கவன ஈர்ப்பு.

(அ) அரக்கோணம் காந்தி சாலை மார்க்கெட் அருகே ஏற்பட்ட தீ விபத்து.

திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரக்கோணம் காந்தி சாலை மார்க்கெட்டு அருகாமையில் 8—4—1989 அன்று ஏற்பட்ட பெரிய தீ விபத்தினால் சுமார் 10 லட்சம் மதிப்புள்ள லாரி ஷெட்டுகள், மூங்கில் தொட்டிகள், டீக் கடைகள் ஆகியவைகள் சேதம் அடைந்துவிட்டன. இந்த விபத்தினால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உடனடி நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்கவேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம், காந்தி சாலை மார்க்கெட்டு அருகில் 8—4—1989 அன்று சுமார் பிற்பகல் 2-30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல தரப்பட்ட தொழிலைச் சார்ந்த 24 கடைகள் சேதம் அடைந்தன. திருவள்ளூர், இராணிப்பேட்டை,

சோளிங்கர், அரக்கோணம் மற்றும் இரயில்வே லோகோ ஷெட் ஆகிய இடங்களிலிருந்து வந்த தீயணைப்புப் படையினர் போராடி ...... என்பது போன்ற குறிப்புகளோடு அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி ஏதாவது கேட்க வேண்டுமானால் உறுப்பினர் அவர்கள் கேட்கலாம்.

அறிக்கை.

வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம், காந்தி சாலை மார்க்கெட்டு அருகில் 8—4—1989 அன்று சுமார் பிற்பகல் 2-30 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தினால் பல தரப்பட்ட தொழிலைச் சார்ந்த 24 கடைகள் சேதம் அடைந்தன. திருவள்ளூர், இராணிப்பேட்டை, சோளிங்கர், அரக்கோணம் மற்றும் இரயில்வே லோகோ ஷெட் ஆகிய இடங்களிலிருந்து வந்த தீயணைப்புப் படையினர் போராடி சுமார் பிற்பகல் 3-30 மணியளவில் இத்தீயினை அணைத்தனர். இத் தீவிபத்தின் காரணம் குறித்து வழக்கு ஒன்று நகரக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது. இத்தீ விபத்தினால் குடியிருப்புகள் பாதிக்கப்படவில்லை. 24 கடைகள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதமோ, உடல் ஊனமோ இல்லை யென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

2. இத் தீவிபத்தில் அட்லாண்டா கன்ஸ்ட்ரக்சன் (பிரைவேட்) லிமிடெட் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான லாரி ஒன்று சேதம் அடைந்துள்ளது. இது காப்புறுதித் திட்டத்தின் கீழ் சேதத்தை ஈடுசெய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரக்கோணம் இந்தியன் வங்கி அதிகாரிகளுடன், அரக்கோணம் கோட்டாட்சியர் நடத்திய பேச்சு வார்த்தையின் தொடர்பாக அந்த வங்கியானது இத் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு ரூ. 1,33,000 (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரம் மட்டும்) கடனுதவி தர முன்வந்துள்ளது. தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிவாரணம் வழங்க அரசு விதிமுறைகளில் இடமில்லை.

திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விவர அறிக்கைக்கு நன்றி. பாதிக்கப்பட்ட 24 கடைக்காரர்களும் மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அந்தப் பாதிப்பு ஏற்பட்ட மறுநாள் நான் சென்று அவர்களைப் பார்த்தபோது, அவர்கள் விட்ட கண்ணீரால், அவர்களோடு சேர்ந்து நானும் அழவேண்டிய காலக்கட்டத்தில் இருந்தேன். விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் 1 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் கடன் உதவி வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு தீவிபத்தால் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு

நிவாரணம் வழங்க விதிமுறைகளில் இடமில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அருள்கூர்ந்து கொஞ்சம் நிதி உதவியும் அளிக்க அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு தலைவரவர்களே, கொஞ்சம் விளக்கமாகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். 24 கடைகள் சேதமடைந்தன. அக்கடைக்காரர்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை 9 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய். அதில் 3 கடைக்காரர்களுக்கு பாதிப்பின் மதிப்பீட்டுத் தொகை 10 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாகவும், 19 கடைக்காரர்களுக்கு 10 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலும், ஒருவருக்கு 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், மற்றொருவருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரக்கோணம் கோட்ட ஆட்சியர் இந்தியன் வங்கி அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில், அந்த வங்கியானது பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு மொத்தமாக 1 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் கடன் உதவி அளிக்க முன் வந்துள்ளது. ஒன்றை மட்டும் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேச்சுரல் கலாமிடீஸ் என்று சொல்லுகிறபோது தீவிபத்தால் பாதிக்கப்பட்ட கடைகளுக்கு நிவாரணம் வழங்க அரசு விதிமுறைகளில் இடமில்லை. அந்தக் காரணத்தாலேதான் மாவட்ட ஆட்சியர், அந்த வங்கி அளிக்க முன் வந்துள்ள கடன் தொகையால் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு தங்களுடைய வியாபாரத்தை முழுமையாகப் புதுப்பித்துக்கொள்ள முடியாது என்றும், மேலும் அவர்கள் தங்கள் வியாபாரத்தை நம்பியே வாழ்க்கை நடத்துவதாகவும் கூறியுள்ளார்கள். எனவே மாவட்ட ஆட்சியர், இத் தீவிபத்தில் பாதிக்கப்பட்ட ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 2 கடைக்காரர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கு ஈடாக முழு நிவாரணத் தொகையும், பாதிக்கப்பட்ட கடைக்காரர்களில் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்த 21 கடைக்காரர்களுக்கு, அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பில் 50 சதவிகிதம் நிவாரணத் தொகையும், மீதமுள்ள பிற்பட்டோர் இனத்தைச் சார்ந்த, தனது கடையை காப்பீட்டுக் கழகத்தில் இன்சூரன்ஸ் செய்துள்ள ஒருவருக்கு அவருக்கு ஏற்பட்டுள்ள இழப்பில் 25 சதவிகிதம் நிவாரணத் தொகையும் முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப் பரிந்துரைத்துள்ளார். மாவட்ட ஆட்சியர் பரிந்துரைகளை ஏற்பதாக இருந்தால் முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து மொத்தம் 4 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்க வேண்டிவரும். மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பின்மீது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து ஓர் விவர அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்டதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், சாதாரணமாக வணிக நிறுவனங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண வழங்குவதில்லை.